# நொச்சிமோட்டையில் அகோரவிமானதாக்குதல்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 20 இதழ் 107
யாழ்ப்பாணம் புதன்கிழமை 02 — 06 — 1993

## பலத்த தேடுதல் வேட்டை

(கொழும்பு)

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று அப்பகுதியில் பலத்த ஷெல் தாக்குதலும் அகோர விமானக் குண்டு வீச்சும், பீரங்கித் தாக்குதலும் நடத்தப்பட்டன.

இதேவேளை இப்பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பலத்த தேடுதல் வேட்டையும் நடத்தப்பட்டதாக தெரியவருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

### சிங்களக் கைதிகளின்
## உண்ணாவிரத அறிவிப்பிற்கு அரசு தொடர்ந்து மௌனம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பாதுகாப்பிலுள்ள போர்க்கைதிகளான 38 சிங்களப் பொலிசாரும் ஒரு இராணுவ சிப்பாயும் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, பொலிஸ் மா அதிபர், மற்றும் சில முக்கிய அமைச்சர்களுக்கும் பௌத்த பீடாதிபதிகளுக்கும் சகல கைதிகளும் கைச்

4-ம் பக்கம் பார்க்க)

### ★ முன்னாள் ஜனாதிபதி பிரேமாவின்
# இரகசிய உளவுப்படை குறித்து விசாரணை நடத்தக் கோரிக்கை!

## ஆணைக்குழு நியமிக்குமாறும் ஆலோசனை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி நியமித்திருந்த ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்ட இரகசிய உளவுப்படை சம்பந்தமாக விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டுமென்று எதிர்கட்சியினர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த விசாரணையை மேற்கொள்ள ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு அல்லது நாடாளுமன்ற நிர்வாகக்குழு நியமிக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## 3 பொலிஸ் நிலைய கட்டிடம் ஏறாவூரில் புலிகள் தகர்ப்பு

(புதுடில்லி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகரத்தில் புதிதாகக் கட்டப்பட்ட பொலிஸ் நிலையத்தின் 3 கட்டடங்களை நேற்று இந்திய விடுதலைப்புலிகள் குண்டுவைத்துத் தகர்த்து விட்டதாக வானொலி

4-ம் பக்கம் பார்க்க)

### புலிகள் — இராணுவத்திற்கிடையில்
## மீண்டும் போர் ஆரம்பம்

(லண்டன்)

விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுப் படைகளுக்கும் இடையில் மீண்டும் போர் ஆரம்பித்துவிட்டது. சிறிது கால இடைவெளிக்குப் பின், இந்தப் போர் சில நாட்களாகத் தீவிரமடைந்து வருவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

### ★ துரித கெதியில்
## இனப் பிரச்னைக்கு தீர்வுகாண ஜனாதிபதி உறுதி மொழி

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் துரிதகெதியில் தீர்த்து வைப்பதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க உறுதியளித்துள்ளார். மேலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளை மீண்டும் புனர்நிர்மாணம் செய்து கட்டியெழுப்புவதற்கு, உலக மக்களின் உதவியையும் அவர் கோரியுள்ளார்.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்று, முதல் தடவையாக இலங்கையில் உள்ள வெளி

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்விடுதலைப்படை தலைவர் நேற்றுக் காலை சுட்டுக்கொலை

(சென்னை)

'தமிழர் விடுதலைப்படை' என்ற அமைப்பின் தலைவரும் பல்வேறு குண்டு வெடிப்புச்சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்தவருமான நாகராஜன் என்பவர் நேற்றுக் காலை திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறையில் காவல்துறையினரால் சுட்டுக் கொலைப்பட்டார்.

நேற்றுக்காலை கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் அங்கு பொலிசார்

(4ம் பக்கம் பார்க்க)

## குமாரியில் தபால்கள் பென்சன்வவுச்சர் வருகிறது

(யாழ்ப்பாணம்)

அடுத்த வாரம் வரும் குமாரி கப்பலில், பென்சன் வவுச்சர்களும், தபால் பொதிகளும் வருவதாகக் கூறப்படுகின்றது.

எதிர்வரும் 4-ம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து புறப்படும் குமாரி கப்பல் அடுத்த வாரம் 7-ம் திகதியளவில் பருத்தித்துறையை வந்து அடையுமென்றும் இக்கப்பலில் உணவுப் பொருட்களுடன் பென்சன் வவுச்சர்களும், தபால் பொதிகளும் வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (வி-ரி)

## தவறான நியமனங்கள் தொடர்பாக விசாரணை

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையில், ஒழுங்கு விதிகளுக்கு மாறாக பல நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டது தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு இந்த விசாரணையை மேற்கொள்கிறது.

மாகாண சபைகள் சேவைக்கு ஆட்சேர்ப்பு

(-4ம் பக்கம் பார்க்க)

### துருக்கியர் கொலை விவகாரம்:
## ஜேர்மனியில் ஒருவர் கைது மேலும் நால்வர் கைதாவர்

(கொழும்பு)

ஜேர்மனியில் கடந்த வார இறுதியில் துருக்கியர்கள் கொலைப்பட்ட மற்றும் தீவைப்பு சம்பவம் தொடர்பாக இளைஞர் ஒருவரை ஜேர்மன் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் நால்வர் விரைவில் கைது செய்யப்படவிருப்பதாகவும் ஜேர்மன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜேர்மனியில் வாழும் 16 லட்சம் துருக்கியர்கள் ஆத்திர

(4-ம் பக்கம் பார்க்க)

### ★ ஐரோப்பிய நாடுகள்
## அகதிகள் மீது கடும் கட்டுப்பாடு விதிக்க முடிவு

(லண்டன்)

ஐரோப்பியசமுதாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு அகதிகளாக வருவோர் மீதும் அங்கு ஏற்கனவே அகதிகளாக சென்றிருப்போர் மீதும் பலவிதமான கடும் கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு ஐரோப்பிய சமுதாய அமைப்பு முடிவு செய்துள்ளது. மேற்படி நாடுகள் கொப்பன்கேஹனில் கூடி இந்த முடிவை எடுத்தனர்.

பொஸ்னியாவில் தற்போது இடம்பெற்றுள்ள யுத்தம் காரணமாக அதிகளவு அகதிகள் மேற்படி நாடுகளுக்கு அகதிகளாகப் படை எடுத்துச் செல்வதை தடுக்கும் ஒரு நட

(-4ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகு சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று 02ம் திகதி புதன்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரிவிளம்பரம்

**முன்னோடி நூல்கள்**

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதிய 'செட்டிக் காரர்கள்' முதலாம்பிள்ளை 30/- நூல்கள் முறையே இலங்கை வானொலி தமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாம் இரண்டாம் தொகுதிகளாகும். (கி-142)

**பயிற்சி வினாத்தாள் (ஆண்டு 4, 5)**

சிறந்த பெறுபேற்றை வருடாவருடம் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வெளியிடப்படும் ஆண்டு 4, ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்கள் 06-06-93 ஞாயிறு வெளியிடப்படும். விடைய ளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கி-170)

வெளிவந்துவிட்டது

**மாற்றம்**

மக்கள் சஞ்சிகை: 03

(சி-168)

## இன்று

(மானிப்பாய்)

நாவற்குழி அருள்மிகு சித்திர வேலாயுதர் ஆலய புனருத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று 2ந் திகதி நடைபெறும். (71)

0 0 9

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் பெரிய புராண படன பூர்த்தி விழா தேவஸ்தான புராண படன மண்டபத்தில் இன்று 2ம் திகதி புதன்கிழமை காலை 8-00 மணிக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

இயங்க முடியாது மூடப்பட்டிருந்த யாழ். ஸ்ரீ வீதி கிளை நூலகம், மீண்டும் தற்காலிகமாக நாவாந்துறை றீகன் நகர், வில்லியம் வீதியிலிருக்கும் 97ம் இலக்க கட்டடத்தில் இன்று 2ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கத்தினால் வைபவ ரீதியாக மீள ஆரம்பித்து வைக்கப்படும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை அதிபர் வண. பேணட் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி வைபவத்துக்கு யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். (வி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

அமரர் மு. சிவரத்தினம் ஞாபகார்த்தமாக அருணோதயா சனசமூக நிலையத்தினர் நடாத்திய கரபந்தாட்ட 'செற்அப்' போட்டியின் இறுதியாட்டம் இன்று நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. டி.பி. பத்மநாதன் பிரதம அதிதியாகவும், யாழ் கரபந்தாட்டச் சங்கத் தலைவர் திரு. டி. ஏ. எம். குணசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றார்கள். (வி)

---

31-ம் நாள்

# நினைவஞ்சலி



**அமரர் மைக்கல் பிலேந்திரன்**

பிறப்பு: 02-01-1961 இறப்பு: 03-05-1993

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;


அன்பு மனைவி,
மாமா, மாமி, மச்சாள்மார்,
மச்சான், தந்தை, தாய்,
பேரன், பேர்த்தி, சகோதரர்கள்,
உறவினர்கள்.

பி. ஏ. கிறேசியன்
1/4, தண்ணீர் தாங்கி
1ம் குறுக்குத் தெரு,
குருநகர், யாழ்ப்பாணம். (கி-167)

---

5-ம் ஆண்டு

# நினைவஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகளின்
வடமராட்சி அரசியல் பிரிவுப் பொறுப்பாளரும்
வடமராட்சி பதில் பொறுப்பாளருமான

# மேஜர் சலாம்

**அவர்கள்**

**வ. சி. நல்லராசன் (பழம்)**

இமையாணன்

பிறப்பு: 17-09-1956 வீரச்சாவு: 02-06-1988

இவற்தெழுந்த சூரியன் தன்னொளி பரப்பினன்
உதயசூரியன் என்று உதவாதோர் தம்கொடி ஏற்றினர்
நாடுவிட்டு நாதிகெட்டு - பிறர்நாட்டினில் தங்கினர்
புலிக்கொடி ஏந்தியோர் புதுப்பரணி படைத்தனர்
மாவீரர் ஈகங்கள் மாண்புகள் சேர்ந்தன........
புவியில் புலிகள் வரலாறு என்றும் திகழும்
மேஜர் சலாமே...... என்றும் நின்றேங்கும் உன்நாமமும்

(கி-166) வடமராட்சி மக்கள்

---

## 200 பெண்கள் விநோத நோயினால் பாதிப்புற்று ஆஸ்பத்திரியில் அனுமதி

(கொழும்பு)

கொழும்பு தெமட்ட கொடையில் தனியார் நிறுவனமொன்றில் பணி புரியும் 200க்கும் அதிகமான பெண்கள் ஒருவித விநோதநோயினால் பீடிக்கப்பட்டு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வேளையில் இந்தப் பெண்களில் அநேகமானோர் மயக்க நிலையிலிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வார காலமாக இந்தப் பெண்கள் கடுமையான தலையிடி, தொண்டை நோவு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

ஒரு சில பெண்கள் தாம் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் மயங்கி

4-ம் பக்கம் பார்க்க

---

வாசகர்களின் பொது அறிவை வளர்க்கும்

## அறிவுக்களஞ்சியம் - 12

பல சுவையான செய்திகளுடன்

**வெளிவந்துவிட்டது!**

(ஏ 3170)

---



**கோண்டாவில் தில்லையம்பதியில் இன்று சப்பறத் திருவிழா**


சேவடி தொழுவோம் அம்மா
சிவகாமி
ராகம்: காபி தாளம்: ஆதி
பல்லவி
சேவடி தொழுதோம் அம்மா -
சிவகாமி
பூவடிப் பாதமே புகலிடமாய
மைந்தோம்
சேவடி தொழுதோம் அம்மா
சிவகாமி
பூவடிப் பாதமே புகலிடமாயமைந்
தோம்

ஆக்கம்:
கவிமாமணி ந. வீரமணிஐயர்
(கி143)

---

7-ம் ஆண்டு

# நினைவஞ்சலி



**அமரர் கந்தையா வேலுப்பிள்ளை**

(முன்னாள் யாழ் மாவட்டத் தொலைத்தொடர்புப் பொறியியலாளர்)

தோற்றம்: 17-02-1940 மறைவு: 21-05-1986 திதி: 02-06-1993

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் ஏழு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டாலும் உங்கள் அன்புமுகம் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையவே மறையாது! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"வேல் அகம்" குருக்கட்டு,
சரணவாய் தெற்கு, கரவெட்டி. (சி-162)

தமிழகத்தில்

# சட்டம் ஒழுங்கு சீர்குலைவால்

## நாடு முழுவதற்கும் கவலை தருகிறது

### - புதிய ஆளுநர்

(சென்னை)

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளமை நாடுமுழுவதற்கும் கவலையளிக்கும் விடயம் என தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் 15வது ஆளுநராக நேற்று முன்தினம் பதவியேற்ற பின் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏனைய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழக மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றங்கள் அபிவிருத்தியடைந்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர் காவிரி நீர்ப் பிரச்னை உட்பட பலதரப்பட்ட விடயங்கள் குறித்தும் உரையாற்றினர்.

இதேவேளை புதிய ஆளுநராக டாக்டர் சென்னாரெட்டி தெரிவு செய்யப்பட்டது குறித்து தமிழக அரசுடன் மத்திய அரசு கலந்தாலோசிக்கவில்லை என்றும் இவ்வாறு மத்திய அரசு நடந்து கொண்டது பாரதூரமானதொரு செயல் எனவும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

இதற்கிடையில் புதிய ஆளுநரின் வருகை மூலம் தமிழக ஆட்சி கலைக்கப்படும் சாத்தியம் அதிகரித்து வருவதாக சென்னைப் பத்திரிகைகள் பல செய்திகளை வெளியிட்டு வருகின்றன. (க-கி)

## இராசி பலன்

02-06-1993

புதன்கிழமை

(தமிழுக்கு வைகாசி 20)

திரயோதசி மு. இ. 10-05 வரை, சுவாதி பி ப. 2-40 வரை, சித்தயோகம், பிரதோஸ விரதம் இராகுகாலம் காலை 11-32 முதல் 1-22 வரை சுபநேரம் 4-22 முதல் 5-52 வரை.

மேடம்- உறவினர் ஆதரவு, பண வரவு, வித்தைமேன்மை.

இடபம்- புத்திரர்பெருமை, எதிர்பாராத நன்மை, சுக வாழ்வு.

மிதுனம்- உறவினர் விரோதம், மன வெறுப்பு, பண முடை.

கடகம்- மனைவியுடன் வேற்றுமை, வீண்பயம், அலைச்சல்

சிம்மம்- பொருள் நஷ்டம், அமைதிக் குறைவு, காரியத் தடை.

கன்னி- எதிரிகள் பயம், கருத்து வேறுபாடு, சௌரயக் குறைவு.

துலாம்- தொழில் முன்னேற்றம், உறவு, திடீர் ஆதாயம்.

விருச்சிகம்- இடமாறுதல், நண்பர் பகை, தயக்கம்.

தனுசு- வீட்டில் மங்கலம், உற்சாகம், இனியபாசம்.

மகரம்- கொண்டாட்டமான வாழ்வு, பயணம், காரிய ஜெயம்.

கும்பம்- பீதியான நிலை, எதிரிகள் ஏற்றம், உடல்நலக் குறைவு.

மீனம்- சகோதரர் பகை, பிள்ளைகளுடன் பிரிவு, கவலை.

— ஜோதிடர்

மத்திய அரசுக்கு மாறான

# 'ஜெ'யின் கருத்து மக்களை திசைதிருப்பும் முயற்சி

(புதுடில்லி)

"விடுதலைப் புலிகள் தம்மை தீர்த்துக்கட்டும் வகையில் மத்திய அரசு பொய்யான குற்றச்சாட்டுக்களை தம்மீது சுமத்தி வருவதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியிருப்பது நாட்டு மக்களை திசைதிருப்பும் ஒரு முயற்சி என இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் மத்திய அரசு தொடர்பாகவும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தொடர்பாகவும் வெளியிட்ட கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழக சிறைகளிலிருந்து விடுதலைப்புலிப் பிரதிநிதிகள் அண்மைக் காலமாக தப்பிச் சென்றமையை ஓர் இயல்பான நிகழ்ச்சியாக முதல்வர் கருதுவதுபோல உள்ளதாகவும் இது முதல்வர் ஜெயலலிதாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உள்ள

(4-ம் பக்கம் பார்க்க)


பன்னிரண்டு

## நினைவஞ்சலி

★ ★



மலர்வு 22 12 1924

உதிர்வு 14 06 1981

அமரர்

## வைரமுத்து இராசையா

(சிவாஸ் ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளர்)

### திதி: 2 6 93 (புதன்கிழமை)


புன்னகை பொதிந்த முகம்
போனவழி தெரியவில்லை
தென்றலைத் தந்த பொதிகை
சென்ற இடம் தெரியவில்லை
நதியொன்று வற்றிப்போனது - ஐயா
வாழ்க்கை நந்தவனத்தில் - உங்கள்
கிளையில் பூத்த புஸ்பங்கள் கிளை
விட்டு மலர்ந்து குலுங்கி சிரிக்கின்றனவே
இந்த வேளைதனில் பார்த்து மகிழ தாங்கள்
இங்கிலையே
இதனை எண்ணும்போது எமது மனங்கள்
சூறாவளியாக சுழல்கின்றதே
ஐயா!
எங்களை விட்டு நீங்கள் மறைந்தாலும்
தங்கள் ஆத்மா எங்களை வழி
நடத்தும் என நம்பி
ஆத்ம சாந்திக்காக எமது கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மனைவி: இ. சாவித்திரி
65, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-171)






## ரேஸ்ரியின் 2-வது போட்டியில்

## பரிசு பெற்றோர் விபரம்

1-வது இ. சுரேக்கா இருபாலை, கோப்பாய்.
இல. 1117 சுவர்மணிக்கூடு

2-வது திருச்செல்வன் ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.
இல. 1366 வெள்ளிப் பாத்திரங்கள்

3-வது திருமதி இ. சுகிர்தலிங்கம்
இல. 6, 4-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
இல. 1397 பாடசாலை உபகரணங்கள்

### ஆறுதல் பரிசுகள் பெற்றோர் விபரம்:-

(1) நகுலேஸ்வரி, கந்தையா வீதி, சாவகச்சேரி (1484)
(2) வே. சின்னையா அம் விழிசிட்டி, ஏழாலை தெற்கு, சுன்னாகம் (380)
(3) ஞானேந்திரன் ஜன்னாலை தெற்கு, கரவெட்டி (796)
(4) சிவம், நாகர்கோவில் (1489)
(5) ப. இந்திரா, குவளை வீதி, நவின்றல், கரவெட்டி (717)
(6) சுயோ, கண்டி வீதி, சாவகச்சேரி (1499)
(7) சரஞ்சன் ரேசபல் அரசடிச் சந்தி, யாழ்ப்பாணம் (1394)
(8) திருமதி சுகிர்தலிங்கம், இல. 6, 4ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்
(9) ம. ராஜன், புளியடி வளவு, கரணவாய் தெற்கு, கரணவாய் (776)
(10) ப. சத்தியகாந்தன், ஊரெழு தெற்கு, சுன்னாகம் (1340)

ரேஸ்ரியின் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கான நிபந்தனைகள்:

பியர், ஜாம் அல்லது கோடியல் போத்தல்களில் ஏதாவது ஐந்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தையும் அதற்குரிய அதிஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக் கொள்ளவும். ஒவ்வொரு குலுக்கலும் மாதாந்த முடிவில் நடைபெறும்.

போத்தல்கள் ஒப்படைக்க வேண்டிய இடங்கள்:

1. ரேஸ்ட்லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட்
14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
2. அறிவகம் சாவகச்சேரி.
3. சுபாஸ் பேக் ஹவுஸ் நெல்லியடி.
4. சுந்தரம் அன் சன்ஸ் சுன்னாகம்.
5. சித்திவிநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு.
6. சபாறிஸ் சுண்டுக்குளி.
7. நிதினி 'Q' சுன்னாகம்.
8. செ. சுரேஸ் சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
9. ஸ்கந்தா மாஸ்ரர் சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை.
10. இ. இராசதுரை பத்திரிகை விற்பனைநிலையம் இருபாலைச் சந்தி

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(எ-3172)

★ தமிழக முதல்வர் ஜெயலலிதா

அமைதிப்படை பற்றி கூறியிருப்பது

# தேச விரோதமான செயல்

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்ட இந்திய அமைதிப் படை பற்றி தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கும் கருத்து, அப்படையைக் கொச்சைப் படுத்துவதாகவும். இந்தியப் படையைப் பற்றி அவர் கூறியிருப்பது தேச விரோதமான செயல் என்றும் தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தம்மைக் கொல்ல விடுதலைப் புலிகள் சதி செய்வதாக ஜெயலலிதா அடிக்கடி கூறுவது திசை திருப்பும் செயலாகும்.

தமது ஆட்சியைக் கவிழ்க்க மத்திய அரசும், மத்திய உளவு நிறுவனமும் சதி செய்வதாக ஜெயலலிதா கூறிய குற்றச்சாட்டை அவர் திரும்பப் பெறவேண்டும். இல்லையேல் அவர் கடும் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும்.

புலிகளுக்கு மத்திய அரசு உதவுவதாக முதல்வர் கூறியிருப்பது பொறுப்பற்ற ஒரு குற்றச்சாட்டாகும். ஹைதராப் பேட்டை முகாமிலிருந்து சாவிஸ் நவாஸ் தப்பியது பற்றி முதல்வர் கூறிய தகவல்கள் தவறானவை. புலிகளின் உளவுத் துறையைச் சேர்ந்த இவரைக் கவனமாகக் கண்காணிக்க வேண்டுமென மத்திய புலனாய்வுத் துறையினர் எச்சரித்திருந்ததை முதல்வர் மூடிமறைக்கிறார்.

சாவிஸ் நவாஸைப் பற்றிப் புலனாய்வுத் துறையினர் எதுவும் தெரிவிக்கவில்லை என முதல்வர் கூறியிருப்பது குறித்து உண்மையைக் கண்டறியப் பகிரங்கப் பொது விசாரணை நடத்தவேண்டும். அவ்விசாரணையில் முதல்வர் கூறிய தகவல்கள் தவறானவை என நிரூபிக்கப்பட்டால் அவர் பொது வாழ்விலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

முதல்வரும் அவரது அமைச்சரவை அமைச்சர்களும் கோடிக்கணக்கில் சொத்துக்கள் சேர்த்துவிட்டதாக மக்கள் நம்புகிறார்கள். எனவே முதல்வரும் அவரது குடும்பத்தவர்களும் அமைச்சர்களும் தங்கள் சொத்துக்கள் பற்றிய கணக்கை வெளியிடவேண்டுமெனவும் திரு பாலசுப்பிரமணியம் கூறியுள்ளார். (இ-ரி)

### மூன்று வாரங்களுக்குள் தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

புதிதாக தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு மூன்று வாரங்களுக்குள் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன அல்லது பழுதடைந்த அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிப்போருக்கு இரண்டு வாரத்தினுள் மீண்டும் வழங்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தகவலை ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

1988-89களில் தென் பகுதியில் ஜே. வி. பி.யினரின் கையோங்கியிருந்த சமயத்தில் பல பேரது அடையாள அட்டைகள் பறித்துச் செல்லப்பட்டதாகவும் இன்னும் சிலரது அடையாள அட்டைகள் அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு மீண்டும் துரித கெதியில் அடையாள அட்டைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (கே-ரி)

### மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று புதன்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் மாலை 3-00 மணி தொடக்கம் 4-00 மணி வரையும் தமிழீழ மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது வரை காலமும் மீட்பு நிதிக்கட்டணச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்பு நிதிக் கட்டணச் செலுத்த முடியும். (இ)

### மத்திய அரசுக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கமான தொடர்பாளை புலப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (க)

### துருக்கியர் கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடையர்கூட்டமென ஜேர்மன் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தீவைத்து காரணமாக உயிரிழந்த ஐந்துபேரின் வீட்டின் முன்னால் ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

இரண்டு பெண்களினதும் மூன்று சிறுமிகளினதும் மரணச் சடங்குகள் சொலிஜன் நகர மண்டபத்தில் நடைபெற இருக்கின்றன.

நூற்றுக் கணக்கான துருக்கிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் ஜெர்மன் குழு இளைஞர்களுக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றன.

இதன் காரணமாக பொலிஸார் தலையிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இந்தத் தாக்குதலையிட்டு ஆழ்ந்த கவலையடைந்திருப்பதாக அதிபர் ஹெல்மட்கோல் அறிவித்துள்ளார். (இ-ரி)

### 3 பொலிஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது.

இந்த மூன்று புதிய கட்டடங்களும் முற்றுமுழுதாக அழித்தொழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கே-ரி)

### நொச்சிமோட்டையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட புளொட் குழுவினரின் இறுதிச்சடங்குகள் நேற்று வவுனியாவில் நடைபெற்றன. கறுப்புக்கொடிகள் ஏற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ரி)

### தமிழர் விடுதலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றபோது மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சைலேந்திரபாபு வை நோக்கி நாகராஜன் துப்பாக்கியால் சுட்டதாகவும், பாதுகாப்புக்காக பொலிசார் சுட்டபோது நாகராஜன் கொல்லப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இவரது சடலத்தையும் பொலிசார் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர். (இ-ரி)

### புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே அண்மைக் காலமாகப் போர் மூளத் தொடங்கிய மோதலின் ஓர் அங்கமாக நேற்று முன்தினம் வவுனியாவில் மோதல்கள் நடந்தன.

கடந்த ஆண்டில் ஒவ்வொரு மாதமும் ஏறத்தாழ நூறு படையினர் பலியாகிக்கொண்டிருந்தார்கள். அதன் பின்னர் இந்த மோதல்கள் ஓரளவு தணிந்திருந்தன.

கடந்த மூன்று நாட்களில் 24 பேர் பலியாகிவிட்டனர். இவர்களில் ஒன்பது பேர் பொது மக்கள். மற்றவர்கள் புளொட்டும், இராணுவத்தினரும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ரி)

### துரித கெதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுத் தூதுவர்கள் மத்தியில் கலந்துரையாடியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: வடக்கு கிழக்குப் பிரச்சினையை மிகவும் குறுகிய இடைவெளிக்குள் தீர்த்து வைப்பதற்கு நான் உறுதியான முடிவு எடுத்துள்ளேன். நாடு முழுவதிலும் அமைதியை ஏற்படுத்துவது எமது இன்றைய அவசியத் தேவையாகும்.

நாட்டில் அமைதி ஏற்படுத்துவதற்காக மிகவும் பொறுப்புடன் நாம் அனைவரும் செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.

வடக்கு கிழக்கு பிரச்சினை தீர்க்கப்பட்டு நாட்டில் பூரண அமைதி ஏற்பட்டதும் அந்தப் பகுதிகளைப் புனரமைப்பதற்கு நாம் வெளிநாட்டு உதவிகளையே முற்றுமுழுதாக எதிர்பார்த்திருக்கிறோம். (இ-ரி)

### 200 பெண்கள்

( 2ம்பக்கத் தொடர்ச்சி)

வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் நோய்க்கான காரணங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையென மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

### தவறான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான ஒழுங்கு விதிகளுக்கு மாறாக எழுதுவினைஞர் பதவிகளுக்கும் அதனோடு ஒட்டிய சேவைக்கும் ஆட்கள் சேர்க்கப்பட்டுள்ளது கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

ஆட்களை சேர்த்துக்கொள்வதில் பல துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் பூர்வாங்க விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

சட்டப்படி மாகாணசபை அரச சேவை ஆணைக்குழுவுக்குத் தெரியாமலும், விளம்பரப்படுத்தப்படாமலும் இந்த நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு நியமிக்கப்பட்டோரை உடனடியாக தற்காலிக வேலைநீக்கம் செய்யுமாறு மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா உத்தரவிட்டுள்ளார். (கே)

### ஐரோப்பிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகையாகவே இந்தப் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய கட்டுப்பாடுகளின் கீழ் அகதிகளாக இந்நாடுகளுக்கு வருவோர் எவரும் இனிமேல் அந்த நாடுகளுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஏற்கனவே அந்த நாடுகளில் தங்கியுள்ளவர்கள் விசா எதுவுமின்றி தங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் அந்த நாடுகளில் தொழில் பார்ப்பதற்கு தேவையான தொழில் அனுமதி ஆவணங்கள் இல்லாதோரும் அங்கு தங்குவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

விசா இல்லாதோரும், தொழில் அனுமதி ஆவணங்கள் இல்லாதோரும் உடனடியாக அந்த நாடுகளிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### 4 இந்திய எம். பி.க்கள் பதவி நீக்கம்

(புதுடில்லி)

திரு. அஜித்சிங் தலைமையிலான ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவல் தடைச் சட்டத்தின் கீழ் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

### முன்னாள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி உளவுப் படையை, திரு. டி. பி. விஜேதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் கலைக்கப்பட்டது தெரிந்ததே.

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஏ. சி. லோறன்ஸ் தலைமையில் இந்த உளவுப் படை இயங்கிவந்தது.

அரசியல்வாதிகள், அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் கடமை புரியும் உயர் அதிகாரிகள் மற்றும் உயர் புள்ளிகள் குறித்து இந்தப்படை இரகசியமாக விசாரணைகளை மேற்கொண்டு வந்தது.

விசாரணைகளின்போது கிடைத்த தகவல்கள் அனைத்தும், முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு வந்தன.

இப்படியான இரகசிய உளவுப்படை ஒன்றை பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்கு வெளியே நியமித்திருந்தது. சட்டத்துக்குப் புறம்பான செயல் என்றும் பதவியில் உள்ள பாதுகாப்புப் படையினரிடமே இந்த நடவடிக்கை ஒப்படைக்கப்பட்டிருக்கவேண்டுமெனவும் எதிரணியினர் தெரிவித்தனர்.

எனவே இந்த சட்டவிரோதமான படை மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் விதமாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிரணியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திரு பிரேமதாஸாவினால் நியமிக்கப்பட்ட இந்த உளவுபடை ஈரானிய ஷா மன்னர் பதவியிலிருந்தபோது இயங்கி வந்த இரகசிய உளவுப் பிரிவுக்கு சமமாகவே இயங்கி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உளவுப் படையில் அங்கம் வகித்தவர்கள், நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் ஆகியோர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதால் அவர்கள் அவ்வாறு தப்பித்துச் செல்லாமலிருப்பதற்கு ஏற்றவிதமான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி ஜனாதிபதி விஜயதுங்காவை எதிரணியினர் வலியுறுத்தியுள்ளனர். (இ-ரி)

### சிங்களக் கைதிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாத்திட்டு எழுதிய மஜஜர்களுக்கு சிறிலங்கா அரசு இதுவரையும் எதுவித பதிலும் அளிக்காது மௌனம் சாதித்து வருகிறது.

தாம் மூன்று ஆண்டுகளாக சிறைக்கைதிகளாக இருந்து விரக்தியுற்ற நிலையிலிருப்பதாகவும் தம்மை விடுவிப்பதற்கு அரசாங்கம் இதுவரையும் எவ்வித உருப்படியான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் இவர்கள் இந்த மஜஜரில் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 13ம் திகதிமுதல் இவர்கள் தமது சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர். (ரி)

### ரதோற்சவ சிறப்பிதழ்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோவில் ரதோற்சவம் நாளை காலை நடைபெறவுள்ளது. இதனையொட்டி நாளைய 'ஈழநாடு'ச் சிறப்பிதழ் வெளியாகவுள்ளது. (சி)

## 70 அரச ஊழியர்கள் நகர கப்பலில் பயணம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் எழுபது அரச ஊழியர்கள் திருமலைக்குப் பயணமானார்கள்.

இந்த 70 ஊழியர்களும் நேற்று வாதுவ கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குச் சென்று பின் அங்கிருந்து 'நகர' கப்பலில் திருமலைக்குச் சென்றார்கள்.

மிகுதி ஊழியர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கப்பல்மூலம் திருமலைக்குச் செல்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (வி-ரி)

## மரண அறிவித்தல்

### திரு. கிளேற்றன் நல்லையா

(உரிமையாளர்: ஒளி இல்லம் (Bright House) அந்தியகால சேவை, பிரதான வீதி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்தவரும் தற்போது நக்கர ஒழுங்கையில் வசிப்பவருமான கிளேற்றன் நல்லையா அவர்கள் கிளிநொச்சியில் காலமானார். இவர் காலஞ்சென்ற நல்லையா, திருமதி ஆசைமுத்து நல்லையா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற சுதந்திர நாயகி (தேவி) அவர்களின் அன்புக் கணவரும் எடித் (யா / தி கு. க. மடம்) ஜஸ்மின் (யா / தி. கு. க. மடம், பிரதீபன் (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தகப்பனும் காலஞ்சென்ற யேசன் பிலிப் யோசேப் (றோஸ் ஆட்ஸ்) திருமதி நல்லம்மா யோசேப் ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

16, நக்கர ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: திரு. ஜேக்கப் புஸ்பராசா, (இ-174)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூன் மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B